


விருதுநகரில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 30 புதிய பேருந்துகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஜெயசீலன் தலைமையில். அமைச்சர்கள் போக்குவரத்து அமைச்சர் சிவசங்கர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் மின் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர். சீனிவாசன், கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள். உடன் மேலாண்மை இயக்குனர் ஆறுமுகம், பொது மேலாளர் துரைச்சாமி, தொ.மு.சா. பொது செயலாளர் ராஜ செல்வம், தலைவர் பார்த்திபன், பொருளாளர் போத்திராஜ், நகர செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன், சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம், நகர் மன்ற தலைவர் எஸ்.ஆர்.எஸ்.ஆர். மாதவன், ஒன்றிய சேர்மன் சுமதி ராஜசேகர், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பி.மதியழகன், எஸ் சுதாகர், வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு, இளைஞரணி ஆர்.கிருஷ்ணகுமார், துணைச் செயலாளர் ஏ.எஸ்.கே. ரமேஷ் குமார், விவசாய அணி நேஷனல் ராமர் மற்றும் போக்குவரத்து கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி வேலூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியில் கலைஞரின் கனவு இல்லம்வழங்கும் நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பயனாளிகளுக்கு வழங்கினார். இதில் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் மு.பாபு ஒன்றிய குழுத் தலைவர் அமுதா ஞானசேகரன், துணைத் தலைவர் மகேஸ்வரி காசி, வேலூர் ஒன்றியச் செயலாளர் சி.எல்.ஞானசேகரன், ஒன்றிய அவைத்தலைவர் மாவட்டக் கவுன்சிலர் தா.பாபு, துணைச் செயலாளர் காசி, மத்திய ஒன்றியச் செயலாளர் பி.வெங்கடேசன், கிழக்கு ஒன்றியச் செயலாளர் கோ.குமரபாண்டியன், அணைக்கட்டு தாசில்தார் வேண்டாமற்றும் பல்வேறு அரசு துறை அதிகாரிகள் மாவட்டக் கவுன்சிலர்கள் ஒன்றிய கவுன்சிலர்கள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை

# ரூ.15 கோடியாக உயர்த்தி - சரக்கு சேவை வரிக்கு விலக்களிப்பீர்!

## ஒன்றிய நிதியமைச்சருக்கு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

புதுடெல்லி, ஜூலை 16-

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ரூபாய் 15 கோடியாக உயர்த்தவும், அந்த நிதிக்கு சரக்குசேவை வரி விலக்களிக்கவும் கோரி ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது:-

தற்போது ஒன்றிய அரசு நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிக்கு ஆண்டுதோறும், ரூ 5 கோடியை, இரண்டு தவணைகளில் (தவணைக்கு ரூ 2.5 கோடி வீதம்) சம்பந்தப்பட்ட மாவட்ட கலெக்டர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு வழங்கி வருவதைத் தாங்கள் அறிவீர்கள்.

இந்தத் திட்டத்தின் நோக்கம், யாதெனில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் மிக அத்தியாவசியமான திட்டங்கள் என்று கருதும் திட்டப் பணிகளுக்காக, அவையும் மக்களுக்குப் பயன்தரத்தக்க நீண்ட கால திட்டப் பணிகளாக இருக்கும் வகையில், இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, நிதிகள் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதாகும். இந்த தொகுதி மேம்பாட்டு நிதித்திட்டம் துவங்கப்பட்ட நாளிலிருந்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில், பின் தங்கிய பகுதிகளில் குடிநீர் திட்டம் உருவாக்குவதற்காகவும் ஆரம்ப கல்வியின் வளர்ச்சிக்காக, பள்ளிகளுக்குத் தேவையான கட்டிடங்கள் கட்டுவதற்கும், மக்களின் சுகாதாரத் திட்டங்களுக்காகவும் பல்வேறு திட்டங்களுக்காக, நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்து செல்லும் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்து வருகின்றனர்.

தங்கள் நாடாளுமன்ற தொகுதியில் உள்ள 15 லட்சத்திற்கும் மேலான மக்களுக்குப் பிரதிநிதியாக செயல்பட்டு வரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியாக. ரூபாய் 5 கோடி மட்டும் பெறுகின்றனர். ஆனால் சராசரியாக 2 லட்சம் மக்களின் பிரதிநிதியாக உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் ஆண்டுதோறும் சுமார் ரூபாய் 2 கோடியிலிருந்து, ரூபாய் 10 கோடி அளவில் தங்கள் தொகுதிகளுக்கான மேம்பாடு நிதியைப் பெற்று வருகின்றனர், இதிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தொகுதி மேம்பாட்டு நிதி மிகக் குறைவு என்பதை புரிந்து கொள்ளவும்.

மாநில அரசுகள் தங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கீடு செய்யும் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகின்றன. டெல்லி மாநில அரசு மிக அதிகபட்சமாக ரூபாய் 10 கோடி அளவிற்கானத் திட்டங்களை ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் பரிந்துரைக்க வகை செய்துள்ளது. பஞ்சாப் மற்றும் கேரள மாநிலங்கள் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ரூபாய் 5 கோடியும், அசாம், சட்டிஸ்கர், மகாராஷ்டிரம் மற்றும் கர்நாடகா மாநிலங்கள் ரூபாய் 2 கோடியும் வழங்குகின்றன, உத்திரப்பிரதேச மாநிலம், சமீபத்தில் இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை ரூ 3 கோடியில் இருந்து ரூ 5 கோடியாக உயர்த்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு



வரும் தொகுதி மேம்பாட்டு நிதியான ரூபாய் 5 கோடியில் சுமார் ரூபாய் 50 லட்சத்திலிருந்து ரூபாய் 75 லட்சம் வரை சரக்கு மற்றும் சேவை வரியாக (ஜி.எஸ்.டி) பிடித்தம் செய்யப்படுகின்றது. இது போக 2.5% தொடர் செலவினங்களுக்காகவும், ஒரு சதவீதம் தொழிலாளர் நிதியாகவும் செலுத்தப்பட வேண்டி உள்ளது. சரக்கு மற்றும் சேவை வரிக்கு எதிராக, இந்தக் கருத்தை நான் தெரிவிக்கவில்லை என்றாலும் ஒன்றிய அரசு தொகுதி மக்களுக்காக செய்யப்படும் இத்திட்டங்களின் அவசியத்தைப் குறித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக குறிப்பிடுகிறேன்.

கடந்த 26.6.2024 அன்று, முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களின் ஒப்புதலுடன் தமிழ்நாடு அரசு சட்டமன்ற உறுப்பினர்களுக்கான மேம்பாட்டு நிதியை சட்டமன்ற உறுப்பினர்கள் எவ்வித கட்டுப்பாடும் இன்றி, ரூபாய் 3 கோடி அளவிற்கு திட்டங்களை பரிந்துரைக்கலாம் என்றும் சரக்கு சேவை வரியை அரசு ஏற்கும் இன்றும் அறிவித்துள்ளது என்பதைத் தாங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

1993-94 ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு திட்டம் ஆண்டுக்கு 5 லட்சம் என ஒதுக்கீடு செய்யப்பட்டு துவங்கப்பட்டது 1998-99ல் ரூபாய் இரண்டு கோடியாக உயர்த்தப்பட்டது. பின்னர் 2011-12 ஆம் ஆண்டிலிருந்து ரூபாய் 5 கோடி ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தனிப்பட்ட முறையில் நிதி வழங்கப்படுவதில்லை. ஒன்றிய அரசு இத்திட்டத்திற்கான நிதியை நேரடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு அனுப்பி விடுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதியில் செயல்பட வேண்டிய தங்கள் தொகுதியில் செயல்படுத்த வேண்டிய திட்ட பணிகளை அரசு வகுத்திருக்கும் விதிகளுக்கு உட்பட்டு பரிந்துரை மட்டுமே செய்கின்றனர். அரசு வகுத்துள்ள விதிமுறைகளின் படி சாலை வசதிகள், பள்ளிகளுக்கு தேவையான கட்டிடங்கள் கட்டுவது போன்ற நிலையான வளர்ச்சி திட்டங்களுக்காக மட்டும் செலவிட முடியும். மிகக் குறைந்த அளவு தொகையை மட்டுமே, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப திட்டங்களைப் பரிந்துரைக்க முடியும்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தபடி இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்தே மிகச்சிறு ஒதுக்கீட்டைப் பெற்றபோதிலும் தொடர்ந்து உயர்த்தப்பட்டு தற்போது ரூபாய் 5 கோடி அளவில் உள்ளது. கடந்த 13 வருடங்களாக இத்திட்டத்திற்கான நிதி உயர்த்தப்படவில்லை என்பதையும் கருத்தில் கொண்டு இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை ஆண்டுக்கு ரூபாய் 15 கோடியாக உயர்த்தி வழங்க தக்க ஆணை வெளியிடும் படி தங்களை கேட்டுக் கொள்கிறேன்

இவ்வாறு அந்த கடிதத்தில் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி. கூறியுள்ளார்.

### தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டில்

# சாலை விபத்தில் காயமடைந்தவர்களுக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜூலை 17-

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு, ஜெர்த்தலாவ் கிராமம், பாரதியார் நகர் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், ஜெர்த்தலாவ் கிராமம், பாரதியார் நகர் அருகில் 15.07. 2024 அன்று மாலை சுமார் 05.30 மணியளவில் இரண்டு தனியார் பேருந்துகள் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதிக்கொண்ட விபத்தில் இரண்டு பேருந்துகளிலும் பயணம் செய்த 21 நபர்கள் பலத்த காயமடைந்ததோடு இவ்விபத்தில் மேலும் பலர் காயமடைந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் காயமடைந்து தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்விபத்தில் காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, பலத்த காய மடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி யிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### விக்கிரவாண்டி தொகுதியில் கழக வெற்றிக்கு பாடுபட்ட

# வேலூர் மாவட்டக் கழகத்தினருக்கு நன்றி!

## மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

வேலூர், ஜூலை 17-

வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி தலைமையில் நடந்தது. அமைப்பு சாரா ஓட்டுநர் அணிமாநில தலைவரும் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம். கதிர் ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்எல்ஏ, பொருளாளர் சி.நரசிம்மன் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம். சுனில் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் மதச்சார்பற்ற இந்தியா கூட்டணியின் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா தன்னை எதிர்த்து போட்டியிட்ட பாமக வேட்பாளரை விட 67 ஆயிரத்து 757 வாக்குகள் கூடுதலாக பெற்று அமோக வெற்றி பெற்றதற்கு திடமான வியூகங்களை வகுத்து, இயக்க உடன்பிறப்புகளுக்கு உந்து சக்தியாக இருந்த மதசார்பற்ற இந்தியா கூட்டணியின் முன்னணி தலைவர்- தி.மு.க. முதலமைச்சர் அவர்களுக்கும் வெற்றி வேட்பாளரை ஆதரித்து அனல் பறக்கும் தேர்தல் பிரச்சாரத்தில் மிக நேர்த்தியாக உரை நிகழ்த்தி வாக்கு சேகரித்த கழக மாநில இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு அரசு இளைஞர் நலன், மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், வேலூர் மாவட்ட திமுக சார்பில் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

மதச்சார்பற்ற இந்தியா கூட்டணியின் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா அமோகமாக வெற்றி பெறுவதற்கு வேலூர் மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளுக்கு நல் ஆலோசனைகளையும், வெற்றிக்கான வழி வகைகளையும் வகுத்துக் கொடுத்த கழக பொதுச் செயலாளர் நீர்வளம் மற்றும் கனிம வளம் சுரங்கத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கும் வெற்றி ஒன்றே நமது இலக்கு என்ற உயரிய நோக்குடன் தேர்தல் களப்பணி ஆற்றிய வேலூர் மாவட்ட திமுகவின் அனைத்து அமைப்புகளின் நிர்வாகிகளுக்கும் இந்தியா கூட்டணி கட்சியின் நிர்வாகிகளுக்கும் வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் வாழ்த்தையும், நன்றியையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

“மக்களுடன் முதல்வர்” எனும் சீரிய திட்டத்தின் இரண்டாம் கட்ட துவக்க விழாவை கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து மாவட்டந் தோறும் நடைபெற உள்ள “மக்களுடன் முதல்வர்’ திட்டத்தை அரசு அதிகாரிகளோடு ஒன்றிணைந்து பொதுமக்கள் யாவரும் நமது கழக ஆட்சியின் மூலமாக அனைத்து வித பயன்களை பெற்றிட மாவட்ட, மாநகர, ஒன்றிய ,நகர பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் தீவிரமாக அப்பணியில் ஈடுபடவும், இவர்களுக்கு உறுதுணையாக தலைமை கழக நிர்வாகிகள் சார்பு அணியின் நிர்வாகிகள் , அனைவரும் ஒத்துழைத்து மேற்படி திட்டம் வெற்றி பெற்று கழக ஆட்சிக்கு நற்பெயரை ஈட்டி தர வேண்டும் என கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கூட்டத்தில் மாவட்ட , நகர, ஒன்றிய மாமன்ற உறுப்பினர்கள் , பகுதி கழக செயலாளர், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் ஊரக பகுதிகளில் உள்ள அரசுஉதவி பெறும்பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்ததை யொட்டி திருப்பத்தூர்மாவட்டம் மாதனூர் ஊராட்சி கரும்பூரில் உள்ள இந்துதொடக்கப் பள்ளியில் மாவட்டக் கழகச் செயலாளர் க. தேவராஜி எம். எல். ஏ. மாணவ–மாணவிகளுக்கு உணவு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ், ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், ஒன்றிய குழு தலைவர் ப.ச.சுரேஷ் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# டி.எம். கதிர்ஆனந்த் எம்.பி. வாக்காளர்களுக்கு இன்று (17.07.2024) நன்றி தெரிவிக்கிறார்!



மதச் சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. இன்று (17.07.2024) காலை கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின் படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

**கே.வி.குப்பம் ஒன்றியம்**

| ஊராட்சியின் பெயர் | நேரம் | ஊராட்சியின் பெயர் | நேரம் |
|---|---|---|---|
| தொண்டான்துளசி | 8.00 | பசுமாத்தூர் | 2.30 |
| அரும்பாக்கம் | 8.15 | கொசவன்புதூர் | 2.45 |
| செஞ்சி | 8.30 | சென்னங்குப்பம் | 3.00 |
| காளாம்பட்டு | 8.45 | பி.கே.புரம் | 3.15 |
| பனமடங்கி | 9.00 | காவனூர் | 3.30 |
| மாளியப்பட்டு | 9.15 | கவசம்பட்டு | 3.45 |
| கீழ்முட்டுக்கூர் | 9.30 | கீ.வ.குப்பம் | 4.00 |
| மேல்மாயில் | 9.45 | வேப்பங்கனேரி | 4.15 |
| ஆலங்கனேரி | 10.00 | பில்லாந்திப்பட்டு | 4.30 |
| பெருமாங்குப்பம் | 10.15 | முடினாம்பட்டு | 4.45 |
| காங்குப்பம் | 10.30 | கொத்தமங்கலம் | 5.00 |
| மாச்சனூர் | 10.45 | சோழமூர் | 5.15 |
| டி.ஆர்.குப்பம் | 11.00 | வேலம்பட்டு | 5.30 |
| நாகல் | 11.15 | வடுகன்தாங்கல் | 5.45 |
| கீழ்ஆலத்தூர் | 11.30 | அங்கராங்குப்பம் | 6.00 |
| சேத்துவண்டை | 11.45 | பி.என்.பாளையம் | 6.15 |
| அமணாங்குப்பம் | 12.00 | லத்தேரி | 6.30 |
| வேப்பூர் | 12.15 | அன்னங்குடி | 6.45 |
| நெட்டேரி | 12.30 | விழுந்தாங்கல் | 7.00 |
| | | திருமணி | 7.15 |